மே 19

மனன வசனம்

**வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்(தான்). வெளி 14:6.**

ஆராய்ச்சிக்கு

*வெளி 14:6,7; மத்தேயு 24:14; கலா 3:22; லூக்கா 23:32-43; ஆதியாகமம் 22:12; வெளி 14:8 - 12.*

மே 19 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 8

# சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளுங்கள்



2பேதுரு 1:12இல் 'இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியம்' என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. இதை தற்காலசத்தியம் என்று செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் கிறிஸ்தவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதாவது, தேவையான சமயத்தில் மனிதர்களுக்கு தேவன் சத்தியத்தை வெளிப்படுத்துகிறார், நாட்கள் செல்லசெல்ல அதிகம் அதிகமான வெளிச்சத்தை ஆண்டவர் தந்து கொண்டே இருக்கிறார். விழுந்துபோன தம்பதியருக்கு, ஆதி 3:15இல் முதல் நற்செய்தி வாக்குத்தத்தமாகக்கொடுக்கப்பட்டது; ஸ்திரீயின்வித்திலிருந்து அவர்கள் எதிர்பார்த்த இரட்சிப்பு கிடைக்குமென்று சொன்னார். ஆபிரகாம் 'பெரிய பலத்த ஜாதியாவான், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்' என்கிற வாக்குறுதி தந்தார். நற்செய்தியின் வாக்குத்தத்தத்தை அது முழுதளவில் வெளிப்படுத்தியது. ஆதி 18:18. இயேசு தம்மைப்பற்றி 'மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார்' என்று சொன்னார். மாற்கு 10:45. இந்த இயேசுவின் வருகைதான் நற்செய்தியின் மிகப்பெரிய வெளிப்பாடு.

கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்புகள் எல்லாம் நிறைவேறப்போகிற காலத்தில் வாழ்கிற கிறிஸ்தவர்களுக்கு வெளி 14:6-12இல் மூன்று தூதர்கள் 'தற்கால சத்தியத்தை' அறிவிப்பதாக நாம் நம்புகிறோம்.

இந்த வாரத்தில், முக்கியமாக முதலாம் தூதனுடைய தூதுபற்றிப் படிப்போம்; ஏனெனில், கடைசிக் கால உபத்திரவங்கள் மத்தியிலும் உண்மையுள்ளவர்களாக வாழ விரும்புவர்களுக்கான முக்கிய சத்தியங்கள் அதில் உள்ளன.

*2018, மே 26 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

**ஞாயிறு, மே 20**

## நற்செய்தி அனைவருக்குமுரியது

**வெளி 14:6; மத்தேயு 24:14; 28:19 ஆகிய வசனங்கள் பொதுவாக வலியுறுத்தும் கருத்து என்ன? வெளிஊழியமும், சாட்சிபகர்தலும் நம் சபையின் இலக்கை நிறைவேற்றுவதில் எவ்வளவு முக்கியப் பங்காற்றுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள இந்த வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன?**

---

---

ஒருவிதத்தில், முதலாம் தூதனுடைய தூதுதான் மாபெரும் ஊழியக் கட்டளையாக இருக்கிறது. மத் 28:19. இக்கடைசிக்காலத்தில் கொடுக்கப்படும் கட்டளை இது. மெய்யாகவே இது 'தற்காலச் சத்தியம்.'

உலகம்முழுதிலுமுள்ள 'சகல ஜாதிகளுக்கும்' அதுதவிர சகல 'கோத்திரத் தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்' சத்தியம் அறிவிக்க வேண்டுமென்று மேலுள்ள மூன்று வசனங்களும் வலியுறுத்துகின்றன. அதாவது, இந்தச் செய்தி உலகம்முழுவதிற்கும் உரியது; ஒவ்வொரு நபரும் இதைக் கேட்டாகவேண்டும்.

**உலகத்தார் அனைவரும் நற்செய்தியை அறிந்திருப்பது ஏன் அவசியமென்று கலா 3:22 கூறுகிறது?**

---

உலகத்தில் பாவம் இல்லாத இடமே இல்லை; அதனால்தான் உலகம் முழுவதும் சென்று, ஊழியப்பணி செய்ய அழைக்கிறார். 'சகல ஜாதிக்காரரும், கோத்திரத்தாரும், பாஷைக்காரரும், ஜனக்கூட்டத்தாரும்' பாவத்திற்குட்பட்டடு, தேவனுடைய பிரமாணத்தை மீறி, 'பாவத்தீன்கீழ்' அடைபட்டுள்ளார்கள். ஏதேனில் ஆதாம் விழுந்தது, ஒவ்வொரு மனிதனையும் பாதித்துள்ளது; எந்தத் தேசத்தாரும் கோத்திரத்தாரும் மக்களும் இந்தப் பாவத்திலிருந்து தப்பிக்கவில்லை. பாவத்தின் உடனடி விளைவுகளுக்கு ஆளானவர்களாக நாம் இருக்கிறோம்; நிவாரணம் கிடைக்காதிருந்தால், பாவத்தின் சம்பளமான நித்திய மரணத்தை சந்தித்திருப்போம். ஆனால் நிவாரணம் கிடைத்தது. இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் அவர் செய்கிற ஊழியம் - இவை மாத்திரமே அந்த நிவாரணத்தைத் தருகின்றன. இயேசு கிறிஸ்துவில் தேவன் தங்களுக்கு அருளியிருக்கும் இந்த மாபெரும் நம்பிக்கையை ஒவ்வொருவரும் அறியவேண்டும். இதனால்தான் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள் உலகம்முழுவதும் சென்று, இயேசுவைப்பற்றிக் கேள்விப்படாதோருக்கு அவரைப்பற்றி அறிவித்துவருகிறார்கள்.

பிறருக்கு நற்செய்தியை அறிவிப்பது, அவ்வாறு அறிவிப்பவருக்கு எவ்வித ஆவிக்குரிய பலனை அளிக்கிறது? அதாவது, பிறருக்கு ஊழியம்செய்ய புறப்படுவது எவ்வாறு இயேசுவின் வருகைக்காக ஆயத்தமாவதற்கான மிகச்சிறந்த வழிகளில் ஒன்றாக இருக்கிறது?

## சிலுவையில் தொங்கிய கள்ளனும், 'நித்திய சுவிசேஷமும்'

உலகத்திற்கு 'நித்திய சுவிசேஷத்தை' அறிவிக்க வேண்டுமென வெளி 14:6 சொல்கிறது. தன்னில்தானே எந்த நம்பிக்கையும் தராமுடியாத ஓர் உலகத்தில் வாழும் மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டிய நம்பிக்கையின் செய்தி இது.

**'நித்திய சுவிசேஷமானது' பாவிகள் அனைவருக்கும் மிகப்பெரிய நம்பிக்கையைத் தருவதை லூக்கா 23:32–43 எவ்வாறு வெளிப்படுத்துகிறது?**

---

இவன் கடினப்பட்ட ஒரு குற்றவாளி அல்லவென்று எலன் ஒய்ட் எழுதுகிறார்; இயேசுவைப்பற்றி அவனுக்குள் 'உணர்த்தப்பட்டபோது அதை தவிர்க்க முயன்றான்;' எனவே 'இறுதியில் தான் கைதுசெய்யப்படும்வரையிலும் மேலும் மேலும் பாவத்திற்குள் மூழ்கினான், ஒரு குற்றவாளியாக விசாரிக்கப்பட்டு, சிலுவையில் மரணதண்டனை பெற்றான்.' – *EGW, DA, p 749.*

ஆனாலும், அவனில் என்ன நிகழ்ந்தது? சிலுவையில் தொங்கிய நிலையில், இயேசுவை சற்றுப் பார்த்துவிட்ட அந்தக் கள்ளன், 'ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்' என்றான். லூக்கா 23:42.

இயேசு என்ன பதில் சொன்னார்? 'சரி நண்பா, உனக்கு உதவ ஆசைதான். ஆனால், நீ உணர்த்தப்பட்டபோது, அதை அசட்டைசெய்துவிட்டு, மேலும் மேலும் பாவத்திற்குள் மூழ்கியிருக்கக்கூடாது' என்று சொன்னாரா? 'வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்' என்று ஏற்கனவே தாம் சொன்னதைச் சுட்டிக்காட்டினாரா? மத் 5:20. அந்தக் கள்ளனின் கடந்தகால தவறுகள் எதையாவது இயேசு அப்போது நினைவுப்படுத்தினாரா?

இல்லை. மாறாக, குணக்குறைபாடுள்ள அந்தத் திருடனை, தன் சார்பில் எந்த நீதியையும் காட்டமுடியாத அந்தத் திருடனை, முன்னர் தம்மை மறுதலித்த அந்தக் கள்ளனை இயேசு திரும்பிப் பார்த்தார்.

அவனை புதிய மனிதனாகக் கண்டார்; உடனே இப்படிச் சொல்கிறார்: நான் உனக்குச் சொல்கிறேன்; இப்போது நான் உனக்குஒரு நிச்சயத்தைத் தருகிறேன்; இப்போதே உன்னுடைய பாவங்களும் குற்றங்களும் குறைகளும் உனக்கு மன்னிக்கப்பட்டன; எனவே, 'நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்' என்றார். லூக்கா 23:43.

இதுதான் 'நித்திய சுவிசேஷம்,' முதலாம் தூதனுடைய தூதின் அடிப்படைச் செய்தி. இந்தச் சத்தியத்தைப் போதிக்காமல் நியாயப்பிரமாணம், ஓய்வுநாள், மரித்தோரின் நிலைபற்றிப் போதிப்பதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. 'நித்திய சுவிசேஷத்தை' மையமாகக் கொண்டிராத இந்தப் போதனைகளால் ஏதாவது நன்மை இருக்கமுடியுமா?

இந்தச் சம்பவத்திலிருந்து நீங்கள் எப்படிப்பட்ட நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளமுடியும்?

## தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்

உலகம் முழுவதிற்கும் ‘நித்திய சுவிசேஷத்தை’ அறிவிக்கும்படி சொல்லி விட்டு, தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள் என்று வெளி 14:6இன் முதலாம் தூதன் சொல்கிறான். எனவே, ‘நித்திய சுவிசேஷத்தோடு’ சேர்த்து இக்காலத்திற்கான சத்தியத்தின் அம்சங்களையும் அறிவிக்கவேண்டும். கடைசி நாட்களுக்கான ‘தற்காலச் சத்தியத்தில்’ வெளி 14:7ம் அடங்கும்.

**வெளி 14:7இல் ‘தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்’ என்று தூதன் சொல்லும் செய்தியின் அர்த்தம் என்ன? நாம் எவ்வாறு தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்தலாம்? இது எவ்வாறு நற்செய்தியோடு சம்பந்தப்பட்டிருக்கிறது?**

---

தேவனுக்குப்பயப்படுவதும், அவரை மகிமைப்படுத்துவதும் சம்பந்தமற்ற கருத்துகள் அல்ல. வேதாகமம் சொல்கிறபடி நாம் உண்மையிலேயே தேவனுக்குப் பயந்தால், அவருக்கு மகிமையைச் செலுத்துவோம். ஒன்றைச் செய்வது இன்னொன்றுக்கு தானாகவே வழிநடத்தும்.

**‘தேவனுக்குப் பயப்படுதலின்’ பொருள்பற்றியும், அவரை மகிமைப்படுத்துவதற்கு அது வழிநடத்துவதுபற்றியும் புரிந்துகொள்ள பின்வரும் வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன? ஆதி 22:12; யாத் 20:20; யோபு 1:9; பிரசங்கி 12:13; மத் 5:16.**

---

---

தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவருக்குப் பயப்படுவதென மேலுள்ள வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. தேவனுக்குக் கீழ்ப்படிந்து, சரியான செயல்களைச் செய்யும்போது, அவரை மகிமைப்படுத்துகிறோம். தேவன்மேலுள்ள பயபக்தியால், நடுங்குவதுதான் பயமென்று பலர் நினைக்கிறார்கள்; ஆனால், இது அதைவிட ஆழமானது. நாம் விழுந்துபோனவர்கள். நாம் பாவிகள். நாம் மரணத்திற்குப் பாத்திரவான்கள். சிலசமயங்களில் எவ்வளவு மோசமான செயல்களைச் செய்துவிடுகிறோம்; நீதியும் நியாயமுள்ள தேவன் அந்தச்செயல்களுக்கு நம்மைக் கொல்வதுதான் சரியானது; இதை உணராதவர்கள் யாராவது இருக்க முடியுமா? இந்தப் பயம்தான் முதலாவது நம்மை பாவமன்னிப்பு வேண்டி சிலுவையண்டைச் செல்லத்தூண்டுகிறது: இரண்டாவது, அந்தத் தீமையிலிருந்து நாம் சுத்திகரிக்கப்படும்படி அவருடைய வல்லமையைக் கேட்டு மன்றாடச் செய்கிறது. சிலுவைமட்டும் இல்லையென்றால், நம் ஆத்துமாக்களை நாம் இழப்பதுதவிர வேறு வழியில்லை. மத் 10:28.

தேவனுக்குப் பயந்து வாழ்ந்த அனுபவம் உங்களுக்கு உண்டா? தேவன்மேல் சரியான அளவு பயமிருப்பது எவ்வாறு நம் ஆவிக்குரிய வாழ்வில் பயனளிக்கிறது; தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதுபோல விசுவாசமுள்ளவர்களாக வாழ்வதற்கு எவ்வாறு உதவுகிறது?

புதன், மே 23

## நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது

முதலாம் தூதனுடைய தூதில், தேவனுக்குப் பயப்படுதலும், அவரை மகிமைப்படுத்தலும் நியாயத்தீர்ப்புடன் சம்பந்தப்படுத்திப் பேசப்படுகிறது. வெளி 14:7. ‘‘தேவன் நியாயமுள்ளவர், சரியான நியாயத்தீர்ப்பை வழங்குவார்’’ என்று வேதாகமம் மிகத்தெளிவாகப் போதிக்கிறது. இந்த உலகில் நியாயமும் தீர்ப்பும் புரட்டப்படலாம்; ஆனால், நியாயமான தீர்ப்பு வழங்கப்படும் நாள் வரப்போகிறது. அதனால், தேவனுக்குப் பயந்து வாழ்வது அவசியம்.

அதனால்தான், ‘நித்திய சுவிசேஷத்தில்’ நியாயத்தீர்ப்பும் சேர்த்துக் கூறப்படுகிறது. இரண்டுக்குமுள்ள சம்பந்தம் என்ன? சுவிசேஷம் என்றால் ‘நற்செய்தி.’ ‘‘நாம் அனைவரும் பாவிகள், தேவனுடைய பிரமாணத்தை மீறினவர்கள்; ஆனாலும், சிலுவையில் தொங்கின அந்தக் கள்ளனைப்போல, நியாயத்தீர்ப்பு நாளில் நம் பாவத்திற்கும் தேவபிரமாணத்தை மீறினதற்குமான தண்டனையைப் பெறாமல் இருக்கலாம்’’ என்பதுதான் அந்த நற்செய்தி.

**பின்வரும் வசனங்களை வாசியுங்கள்; ‘என்னுடைய சுயபுண்ணியங்களின் பேரில் நான் நிற்கநேர்ந்தால் என்னவாகும்?’ என்று உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள். மத் 12:36; பிரசங்கி 12:14; ரோமர் 2:6: 1கொரி 4:5.**

---

நம் தலையிலுள்ள முடிகளின் எண்ணிக்கையைக்கூட அறிந்திருக்கும் தேவன், இந்த உலகத்தை நியாயந்தீர்க்கப்போகிறார். அதனால்தான், ‘நித்திய சுவிசேஷம்’ அவ்வளவு பெரிய ஒரு நற்செய்தியாக இருக்கிறது. நியாயத்தீர்ப்பு உண்டு, ஆனால் இயேசுவுக்கு உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் கழுவப்பட்டும் பரிசுத்தமாக்கப்பட்டும் நீதிமான்களாக்கப்பட்டும் இருப்பவர்களுக்கு **‘ஆக்கினைத்தீர்ப்பில்லை.’** 1கொரி 6:11; ரோமர் 8:1. ஏனெனில், இயேசு கிறிஸ்து அவர்களுக்கு நீதியாக இருக்கிறார்; நியாயத்தீர்ப்பில் அவர்கள் நீதிமான்களாகத் தீர்க்கப்பட அவர் நீதி போதுமானது.

‘குற்றச்சாட்டுகளை மனிதன் தானாக எதிர்கொள்ள முடியாது. பாவக்கறைபடிந்த வஸ்திரங்களோடு, தேவன்முன்பாக தன் பாவத்தை அறிக்கையிடலாம். மனந்திரும்பி, விசுவாசத்தோடு தங்கள் ஆத்துமாக்களை தம்மிடம் அர்ப்பணிக்கிற ஒவ்வொருவருக்காகவும் நம் வழக்கறிஞரான இயேசு பரிந்துபேசுகிறார். அவர்களைக் குற்றப்படுத்துகிறவனை அவர் கல்வாரியைச் சொல்லித் தோற்கடிக்கிறார். சிலுவையின் மரணபரியந்தமும் தேவபிரமாணத்திற்கு அவர் பரிபூரணமாகக்கீழ்ப்படிந்ததால், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் அவர் பெற்றுக்கொண்டார்; தம் பிதாவின் இரக்கங்களை முன்னிட்டு, பாவ மனிதனை மீண்டும் அவரோடு ஒப்புரவாகச் செய்கிறார்.’ - *5T, p 471.*

நியாயத்தீர்ப்பு நிச்சயம் உண்டு என்பதால், நாம் ஏன் கட்டாயமாக பாவமன்னிப்பைப் பெற்றிருக்க வேண்டும்? இயேசுவின் மூலம் தேவன் நமக்குக் காட்டின அதே கிருபையையும் பாவமன்னிப்பையும் நாம் எவ்வாறு நமக்கு எதிராகக் குற்றம்செய்தவர்களுக்குக் காட்டமுடியும்?

வியாழன், மே 24

## வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்

**வெளி 14:6,7 என்னென்ன விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொல்கிறது? அவை எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாக இருக்கின்றன?**

---

சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிக்கும்படியும், 'தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்தும்படியும்' சொல்லிவிட்டு, தேவனே சிருஷ்டிகரென்று அவரைத் தொழுகொள்ளும்படி அழைப்பு கொடுக்கிறது. தேவனை சிருஷ்டிகராக ஏற்றுக்கொள்ளாவிட்டால், 'நித்திய சுவிசேஷம், சாட்சிபகர்தல், நியாயத்தீர்ப்பு' போன்ற 'தற்கால சத்தியங்கள்' அர்த்தமுடையவயையாக இருக்குமா? தேவன் தாம் அனைத்தையும் சிருஷ்டித்தவர் என்கிற அடிப்படைச்சத்தியத்திலிருந்துதான் இந்தச் சத்தியங்களும், மற்ற அனைத்து சத்தியங்களும் உருவாகியுள்ளன. தேவனை சிருஷ்டிகராகத் தொழுதுகொள்ளும்போது, அடிப்படையான ஒரு விஷயத்தை நாம் நம்புவது வெளிப்படுகிறது. அடிப்படையில் நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதர்கள், மற்ற உயிரினங்களைவிட வித்தியாசமானவர்கள் என்பது வெளிப்படுகிறது. தேவனை சிருஷ்டிகராகத் தொழது கொள்ளும்போது, நம் பிழைப்புக்கும் எதிர்கால நம்பிக்கைக்கும் அவரே ஆதாரமென்று அவரைச் சார்ந்திருப்பதை ஒத்துக்கொள்கிறோம். இங்குதான் ஏழாம் நாள் ஓய்வுநாளைக் கைக்கொள்வதும் முக்கியமானதாகிறது. தேவனே நம் சிருஷ்டிகர் என்பதால், அவரை மட்டுமே நாம் தொழுகிறோம் என்று காட்டுகிறோம். சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும்; நியாயத்தீர்ப்பு உண்டென அறியவேண்டும்; தேவனை நம் சிருஷ்டிகராகத் தொழுதுகொள்ளவேண்டும்.

**தேவனை நம் சிருஷ்டிகராக நாம் தொழுதுகொள்வது முக்கியம் என்பதைப் புரிந்துகொள்ள வெளி 14:8–11 வசனங்கள் எவ்வாறு உதவியாக இருக்கின்றன?**

---

---

கடைசிக்கால நிகழ்வுகளின்போது, சிருஷ்டிகரைத் தொழுவதற்கு பதிலாக மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தொழுவதற்கான அழுத்தம் உலகம் முழுவதிலும் அதிகரிக்கும். மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குபவர்கள்குறித்து வேதாகமம் சொல்கிற எச்சரிப்பைக் கவனிக்கவேண்டும்; அப்போதுதான் தேவனை நம் சிருஷ்டிகராக, நம் தொழுகைக்குப் பாத்திரராக ஏற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியமென்பது புரியும். இந்த உண்மையைப் புரிந்துகொள்வது, முன்பைவிட இப்போது மிக முக்கியமானதாக இருக்கிறது.

இவ்வுலகில் தேவன் சிருஷ்டித்துள்ளவற்றின் ஒப்பற்ற அழகை நேரமெடுத்து தியானியுங்கள். அவற்றையெல்லாம் சிருஷ்டித்தவரைப்பற்றி அவை என்ன சொல்லுகின்றன? அவர்மட்டுமே ஏன் தொழுகைக்குப் பாத்திரராக இருக்கிறார்?

## மேலும் படிக்க:

"வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கின வரையே தொழுதுகொள்ளுங்கள்' என்று வெளி 14:7 கூறுகிறது; 'கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார்' என்று யாத் 20:11 ஓய்வுநாள்பற்றிச் சொல்கிறது. இந்த இரண்டு வசனங்களுக்கும் தொடர்பிருப்பதாக வேத அறிஞர்கள் எப்போதுமே நம்பிவருகிறார்கள். வெளிப்படுத்தலில் கூடுதலாக, 'நீரூற்றுகளையும்' படைத்தவர் தேவன்தாம் என்று சொல்லப்படுகிறது.

ஆசிரியர் யோன் பால்ட்வின் பின்வருமாறு கூறுகிறார்: "யாத் 20:11இலிருந்து வரிசையாகச் சொல்லிவிட்டு, ஒன்றைமட்டும் வித்தியாசமாக தூதன் சொல்கிறான்; 'நீரூற்றுகள்' என்று தூதனை இயேசு சொல்லவைத்தது ஏன்? அது தேவநோக்கமாக இருக்கவேண்டும். மரங்கள், பறவைகள், மீன்கள், மலைகள் என்று சிருஷ்டிப்பி லிருந்து வேறு எதையும் சொல்லாமல் 'நீரூற்றுகள்' என்று தூதன் சொல்வது ஏன்?

"தேவன் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்ததைபற்றிப் பேசும்போது தான், 'நீரூற்றுகள்'பற்றி வருகிறது; எனவே, முற்காலத்தில் தேவன் நியாயத்தீர்ப்பு வழங்கின ஒரு சம்பவத்தை மக்களுக்கு அது நினைவூட்டுகிறது. 'நீரூற்றுகள்' என்பதன் மூலம் ஜலப்பிரளயத்தை மக்களுக்கு நினைவூட்ட வேண்டுமென்று தேவன் நினைத்திருக்கலாம். ஜலப்பிரளய சம்பவத்தில், **தேவன் நியாயந்தீர்க்கிறவர்** என்றும், **என்றென்றும் உண்மையும் கிருபையும் உள்ளவர்** என்றும் தெரிகிறது. 'நீரூற்றுகள்' என்றதும், இந்த அர்த்தங்கள் மனதில் வரவேண்டும். வெளி 14இல் நியாயத்தீர்ப்புபற்றி முதலாம் தூதன் அறிவிக்கும் செய்தியை தனிப்பட்டவிதத்தில் எவ்வளவு சிரத்தை யுடன் கவனிக்கவேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுவதற்காக 'நீரூற்றுகள்' எனும் வார்த்தையைச் சேர்த்திருக்கலாம்.' - யோன் பால்ட்வின்.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *'நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்தோம்' என்று ஏசாயா 53:6 கூறுகிறது. இங்கு எல்லாரும் என்பதற்கான எபிரெய வார்த்தை* **கள்ளானு**. *அதே வசனத்தில், 'நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும்' இயேசு தம்மேல் விழப் பண்ணியதாகவும் ஏசாயா கூறுகிறார். இங்கும் எல்லாரும் என்பதற்கான எபிரெயெ வார்த்தை* **கள்ளானு***தான். நம் பாவப்பிரச்சனை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அதற்கான தீர்வு அதைவிட மேலானது என்பதை இது எவ்வாறு காட்டுகிறது?*

3. *சிலுவையில் தொங்கின கள்ளனுடைய சம்பவத்தில் வேறு என்ன படிப்பினைகள் உள்ளன? ஒருவேளை அந்தக் கள்ளனுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டு, அவனைச் சிலுவையிலிருந்து இறக்கி, வாழவிட்டிருந்தால், எப்படிப்பட்ட வாழ்க்கையை அவன் வாழ்ந்திருப்பான்? நம்முடைய வாழ்க்கையை மாற்றவல்ல கிறிஸ்துவின் வல்லமைபற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*